**கவனிக்க.**- *17.09.2010 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி III மற்றும் பகுதி IV (அ) முதலியன பிரசுரிக்கப்படவில்லை.*
**கவனிக்க.**- இவ்வர்த்தமானியின் பகுதி IV (அ) மற்றும் பகுதி IV (ஆ) ஆகியன சிங்கள மற்றும் ஆங்கில மொழியில் தனியாகப் பிரசுரிக்கப்பட்டுள்ளன.

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

**අංක 1673 - 2010 සැප්තැම්බර් මස 24 වැනි සිකුරාදා - 2010.09.24**

*1673 ஆம் இலக்கம் - 2010 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 24 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

# பகுதி IV (ஆ) - உள்ளூராட்சி

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | 1400 | வரவு செலவுக் கூற்றுகள் | - |
| பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | - | வரவு செலவு திரட்டுகள் | - |
| உள்ளூராட்சி அறிவித்தல்கள் | 1407 | ஆதன விற்பனைகள் | - |
| துணைவிதிகள் | - | ஆயவிற்பனையும் குத்தகையும் | - |
| உள்ளூர் அதிகாரசபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள் | - | வீதிச் செயற்குழுவின் அறிவித்தல்கள் | - |
| | | நானாவித அறிவித்தல்கள் | - |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

## முக்கிய அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தில், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்**. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, அதாவது 2010, ஒற்றோபர் மாதம் 01 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2010, செத்தெம்பர் மாதம் 17 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**லக்ஷ்மன் குணவர்தன,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2010 ஆம் வருடம் சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

# பதவிகள் - வெற்றிடம்

## கரந்தெனிய பிரதேச சபை

தென் மாகாண அரச சேவையில் பதவி வெற்றிடம்

கரன்தெனிய பிரதேச சபையில் வெற்றிடமாகவுள்ள கீழ்காணும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பதவிக்காக தென்மாகாணத்தினுள் வசிக்கும் தகுதியுடைய நபர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. பிரதேச சபை எல்லைக்குள் வசிக்கும் விண்ணப்பதாரிகளுக்கும், தற்போது அமைய மற்றும் பதிற்கடமையில் இருப்பவர்களுக்கும் விஷேட கவனம் செலுத்தப்படும்

| | பதவி | வெற்றிடம் | சம்பள அளவுத்திட்டம் (மாதாந்தம்) | குறைந்தபட்ச கல்வித் தகைமை |
|---|---|---|---|---|
| 01 | சாரதி | 01 | 12,470-10×130-10×145-10×160- ரூபா 18,860 | 5 ஆம் தரம் சித்தி அடைந்திருத்தல் வேண்டும் |

**2. ஆட்சேர்ப்பு செய்வதற்கான நிபந்தனைகள் :**

(1) விண்ணப்பதாரி இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும் ;
(2) விண்ணப்பதாரி தென்மாகாணத்தில் தொடர்ந்து 3 வருடங்கள் நிரந்தர வசிப்பாளராக இருத்தல் வேண்டும் ;
(3) பிரதேச சபை எல்லைக்குள் வசிக்கும் விண்ணப்பதாரிகளுக்கு, தற்போது அமைய மற்றும் பதிற் கடமையில் உள்ளவர்களுக்கும் விஷேட கவனம் செலுத்தப்படும் ;
(4) விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியன்று 18 வயதிற்கு குறையாதவராகவும் 45 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும். (தற்போது அரச சேவை மற்றும் மாகாண அரச சேவையில் உள்ள பதில் கடமை, தற்காலிக, ஒப்பந்த அடிப்படை நியமனம் வயது 18 இற்கும் 45 இற்கும் இடையில் அமைந்ததாக இருத்தல் வேண்டும்.)
(5) விண்ணப்பதாரி சிறந்த நற்குணமும், உடல் நலமும் உள்ளவராகவும் இருத்தல் வேண்டும் ;
(6) கரன்தெனிய பிரதேச சபையில் தற்போது தற்காலிக, அமைய, பதிற் கடமை மற்றும் ஒப்பந்த அடிப்படையில் (வேலைப்பிரிவு) உள்ளவர்கள் கருதி கூடிய கவனம் செலுத்தப்படும்.
(7) விண்ணப்பம் கோரப்பட்டதன் பின்னர் அல்லது கோரப்படும் காலத்தினுள் அல்லது ஆட்சேர்ப்பை ஒத்திவைத்தல் அல்லது மாற்றங்கள் செய்தல் அல்லது இவ்வறிவித்தலை ரத்துச் செய்தல் அல்லது திருத்தங்கள் செய்தல் என்பவற்றில் பூரண அதிகாரம் கரன்தெனிய பிரதேச சபைத் தலைவருக்கே உரியது ;
(8) தண்டனை குற்றவியல் சட்டத்தின் கீழ், குற்றவாளியாக தண்டனைக்கு உட்படுத்தப்பட்டவராக இருத்தல் கூடாது.

**சேவையில் அமர்த்தப்படுத்துவதற்கான நிபந்தனைகள் :**

(1) இப்பதவி நிரந்தரமானதும், ஓய்வூதியத்துக்கு உரித்துடையதுமாகும் ;
(2) இந்த நியமனம் மூன்றாண்டு காலத்திற்கு தகுதிகாண் நிலையில் உள்ளதாகும் ;
(3) இந்த ஆட்சேர்ப்பு நிபந்தனைகளுக்கும் கட்டுப்பாடுகளுக்கும் மாறாக, இலங்கை அரச தாபனக் கோவையின் விதிகளுக்கும், நிதி ஒழுங்கு விதிக் கோவைக்கும், திணைக்களக் கட்டளைகளுக்கும், தென்மாகாண அரச சேவை ஆணைக்குழுவின் அல்லது கரன்தெனிய பிரதேச சபையினால் வெளியிடப்படும் கட்டளைகளுக்கும் கட்டுப்படல் வேண்டும்.

**விண்ணப்பிக்கும் முறை :**

(அ) விண்ணப்பங்கள் இந்த அறிவித்தலின் இறுதியில் தரப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கமைய 12 × 18 செ. மீ. அளவிலான கடதாசியில் தயாரிக்கப்படுதல் வேண்டும் ;
(ஆ) பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் பதிவுத்தபாலில் ''தலைவர் கரன்தெனிய பிரதேச சபை, கரன்தெனிய'' என முகவரியிடப்பட்டு 2010 ஒற்றோபர் 21 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக அனுப்பப்படல் வேண்டும். அத்தோடு விண்ணப்பங்கள் அனுப்பப்படும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் ''சாரதிப் பதவிக்கான விண்ணப்பம்'' எனத் தெளிவாக எழுதப்படல் வேண்டும் ;
(இ) அரசாங்க சேவை அல்லது மாகாண அரசாங்க சேவையில் உள்ள விண்ணப்பதாரிகள் அவர்களது திணைக்களங்களின் தலைவர்களூடாக குறிப்பிட்ட திகதிக்கு முன்னர் அனுப்பப்படுவது அவசியமாகும்.
(ஈ) குறிப்பிட்ட திகதிக்கு பின்னர்/தாமதமாகக் கிடைக்கப்பெற்ற விண்ணப்பங்கள் எந்தவித அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும்.

விண்ணப்பப்படிவத்துடன் கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள ஆவணங்கள், சான்றிதழ்களின் பிரதிகள் இணைக்கப்படல் வேண்டும். நேர்முகப் பரீட்சையின்போது மூலப் பிரதிகள் சமர்ப்பிக்கப்படல் அவசியமாகும்.-

(1) பிறப்பு அத்தாட்சிப்பத்திரம் ;
(2) கல்விச் சான்றிதழ் ;
(3) பதிவை உறுதிப்படுத்தும் சான்றிதழ் ;
(4) அண்மையில் பெற்றுக்கொண்ட கிராம உத்தியோகத்தரின் சான்றிதழ் ;

(5) அண்மையில் பெற்றுக்கொண்ட நற்சான்றிதழ்கள் இரண்டு ;
(6) கனரக சாரதிப் பத்திரத்தின் பிரதி ஒன்று ;
(7) தொழில் தகைமை பற்றிய சான்றிதழ்.

காமினி அமரவன்ச முனுகொட,
தலைவர்,
கரந்தெனிய பிரதேச சபை.

கரந்தெனிய பிரதேச சபை,
கரந்தெனிய,
2010.08.25.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**கரன்தெனிய பிரதேச சபை - கரந்தெனிய**

தென் மாகாண அரச சேவையில் ........................................... பதவிக்கான ஆட்சேர்ப்பு

1. (i) முதலெழுத்துக்களுடன் பெயர் :-----.
   (ii) முதலெழுத்துக்களினால் குறிப்பிடப்படும் பெயர்கள் :-----.
2. நிரந்தர வசிப்பிட மாவட்டம் :-----.
3. நிரந்தர முகவரி :-----.
4. தேசிய அடையாள அட்டை இல. :-----.
5. பால் (ஆண்/பெண்) :-----.
6. பிறந்த திகதி :- ஆண்டு :-----, மாதம் :-----, திகதி :-----.
7. 2010.09.27 ஆந் திகதியன்று வயது :-
   வருடங்கள் :-----, மாதங்கள் :-----, நாட்கள் :-----.
8. நீர் இலங்கையர் என்பது பிறப்புரிமையினாலா? அல்லது பதிவினாலா? என்பது :-
9. குறைந்தபட்ச கல்வித்தகைமை :- (சித்தியடைந்த பரீட்சை பற்றிய விபரம்) :-----.
10. தொழில்சார் தகைமைகள் :- (சான்றிதழ்கள் மூலம் உறுதிப்படுத்தல் வேண்டும்) :-----.
11. தற்போதைய தொழில் பற்றிய விபரம் :-----.
12. உங்களுக்கு எதிராக எப்போதாவது நீதிமன்றம் ஒன்றில் குற்றத்தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளதா? :-----.

இவ்விண்ணப்பப்படிவத்தில் என்னால் கொடுக்கப்பட்டுள்ள விபரங்கள் யாவும் உண்மையானவையும், சரியானவையும் என இத்தால் உறுதிமொழிகிறேன். இங்கு கொடுக்கப்பட்டுள்ள விபரங்கள் எவையேனும் பொய்யானவை அல்லது பிழையானவை எனத் தெரிவு செய்யப்படுவதற்கு முன்பு கண்டுபிடிக்கப்பட்டால் நான் தகைமையற்றவனாவேன் என்பதையும், தெரிவு செய்யப்பட்டதன் பின்னர் கண்டுபிடிக்கப்பட்டால் எவ்வித நட்டஈடுமின்றி பதவியில் இருந்து விலக்கப்படுவேன் என்பதையும் நான் அறிவேன்.

.......................................................,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :-----.

**விண்ணப்பதாரி அரசாங்க சேவையில் இருப்பாரெனின் திணைக்கள/நிறுவனத் தலைவரின் சான்றிதழ்**

விண்ணப்பதாரர் திரு./திருமதி/செல்வி ........................................... என்பவர் தற்பொழுது இத்திணைக்களத்தில்/மாகாண சபையில்/தாபனத்தில் ............................... பதவியை வகித்து வருகின்றார். அவர் தெரிவு செய்யப்பட்டால் தற்போது வகிக்கும் பதவியில்/சேவையில் இருந்து விடுவிக்க முடியும்/முடியாது. அவர் எச்சரிக்கை தவிர்ந்த ஏனைய எந்தவொரு ஒழுக்காற்றுத் தண்டனைக்கும் உட்படவில்லை எனவும் உறுதிப்படுத்தி, விண்ணப்பப்படிவத்தை சிபாரிசு செய்து/செய்யாது முன்வைக்கிறேன்.

.......................................................,
திணைக்கள/நிறுவனத் தலைவரின் கையொப்பம்.

பெயர் :-----.
பதவி :-----.
திணைக்களம் / நிறுவனம் :-----.
(உத்தியோகபூர்வ முத்திரை)
திகதி :-----.

9-1065

## கட்டான பிரதேச சபை

.......................... மேல் மாகாண அரசாங்க சேவையில் பதவி வெற்றிடங்கள்

கட்டான பிரதேச சபையில் பின்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பதவி வெற்றிடங்கள் பொருட்டு தேவைப்படும் தகைமைகளை நிறைவு செய்து மேல் மாகாணத்தினுள் நிரந்தரமாக வதிபவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன :-

| பதவிப்பெயர் | பதவிகளின் எண்ணிக்கை | சம்பள அளவுத்திட்டம் | கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் |
|---|---|---|---|
| அலுவலகத் தொழிலாளர் | 01 | ரூபா 11,730 – 10 ×120 – 10 × 130– 10 ×145 – 15 × 160 - ரூபா 17,600 (ரூபா 12,090 சம்பளப் படி நிலைக்கு முன்னர் வினைத் திறமைகாண் பரீட்சை உண்டு.) | விண்ணப்பதாரர் ஆகக் குறைந்தது தரம் 08/ஆண்டு 9 இல் சித்தியடைந்திருத்தல் வேண்டும். |
| துப்புரவேற்பாட்டுத் தொழிலாளர் | 09 | ரூபா 11,730 – 10 ×120 – 10 × 130– 10 ×145 – 15 × 160 - ரூபா 17,600 | கல்வித்தகைமைகள் கவனத்தில் கொள்ளப்படமாட்டா. |
| வீதித் தொழிலாளர் | 01 | ரூபா 11,730 – 10 ×120 – 10 × 130– 10 ×145 – 15 × 160 - ரூபா 17,600 | குறைந்தது தரம் 8/ஆண்டு 9 இல் சித்தியடைந்திருத்தல் வேண்டும். |
| காவலாளர் | 01 | ரூபா 11,730 – 10 ×120 – 10 × 130– 10 ×145 – 15 × 160 - ரூபா 17,600 (12 ஆவது படி நிலையிலிருந்து) | விண்ணப்பதாரர் க. பொ. த. (சா/த) பரீட்சையில் ஒரே அமர்வில் ஆறு பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். |

**பதவியில் அமர்த்தும் நியதிகள்** :

விண்ணப்பதாரர்-

(1) இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும் ;

(2) விண்ணப்ப முடிவுத் திகதிக்கு உடன் முன்னர் 03 வருடங்கள் மேல்மாகாணத்தினுள் நிரந்தர வதிவிடத்தினைக் கொண்டிருத்தல் வேண்டும் ;

(3) விண்ணப்ப முடிவுத்திகதியன்று வயது 18 வருடத்திற்கு குறையாமலும் 45 வருடத்திற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். (அரசாங்க அல்லது மாகாண அரசாங்க சேவையில் நிரந்தரமாகப் பணிபுரிபவர்களுக்கு இந்த உச்ச வயதெல்லை ஏற்புடையதன்று.)

(4) தண்டனை விதிக்கோவையின் கீழ் நீதிமன்று ஒன்றில் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன் பேரில் தண்டிக்கப்பட்டவராக இருத்தலாகாது;

(5) சிறந்த குணநலன் மற்றும் நல்ல உடல் ஆரோக்கியமுடையவராக இருத்தல் வேண்டும் ;

(6) கட்டான பிரதேச சபையின் நியாயாதிக்கத்தினுள் வதிபவர்களுக்கும் கூறப்பட்ட பிரதேச சபையில் அமய, பதிலீட்டு அல்லது ஒப்பந்த அடிப்படையில் ஏற்கனவே பணிபுரிபவர்களுக்கும் முன்னுரிமை வழங்கப்படும்.

இந்த ஆட்சேர்ப்பினை தாமதப்படுத்தும் அல்லது மாற்றும் அல்லது அத்தகைய விண்ணப்பங்களினைக் கோரிய பின்னர் அல்லது கோரப்பட்டுக் கொண்டிருக்கும் பொழுது இந்த அறிவித்தலை இரத்துச் செய்வதற்கு அல்லது திருத்துவதற்கான உரிமை கட்டான பிரதேச சபை செயலாளருக்கு உண்டு.

**விண்ணப்பத்தினைச் சமர்ப்பிக்கும் முறை** : இந்த அறிவித்தலில் தரப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு அமைவாக 12" × 8" அளவு தாள் ஒன்றில் தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்கள் "செயலாளர், கட்டான பிரதேச சபை, தெமன்ஹந்திய" எனும் முகவரிக்கு பதிவுத்தபாலில் 2010.11.15 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் அனுப்பப்படுதல் வேண்டும். விண்ணப்பத்தினை இணைந்து அனுப்பும் கடித உறையின் இடப்பக்க மேல் மூலையில் "விண்ணப்பிக்கும் பதவி"யினைக் குறிப்பிடல் வேண்டும். அரசாங்க அல்லது மாகாண அரசாங்க சேவையில் ஏற்கனவே பணிபுரியும் விண்ணப்பதாரர்கள் தமது விண்ணப்பங்களை தத்தமது திணைக்களத் தலைவர்கள் ஊடாக அனுப்புதல் வேண்டும். உரிய திகதிக்குப் பின்னர் கிடைக்கும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

பின்வரும் ஆவணங்களின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதிகள் விண்ணப்பத்துடன் சேர்த்து அனுப்பப்படல் வேண்டும் :-

(1) பிறப்புச் சான்றிதழ் ;
(2) கல்விச் சான்றிதழ் ;
(3) வதிவிடத்தினை ஆதாரப்படுத்தும் சான்றிதழ் ;
(4) அண்மையில் பெற்றுக்கொள்ளப்பட்ட இரண்டு குணநலச் சான்றிதழ் (அதில் ஒன்று பிரதேசத்தில் உள்ள கிராம அலுவலரிடமிருந்து பெற்றுக்கொள்ளப்படல் வேண்டும்) ;
(5) பிற தகைமைகள் மற்றும் அனுபவத்துடன் தொடர்புற்ற சான்றிதழ்கள்.

ஈ. டி. நந்தாவதி,
(பதில்) செயலாளர்,
கட்டான பிரதேச சபை.

கட்டான பிரதேச சபை,
தெமன்ஹந்திய,
2010.09.06.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**கட்டான பிரதேச சபை**

மேல் மாகாண அரசாங்க சேவையில் ................. பதவி

1. முதலெழுத்துக்களுடன் பெயர் :-----.
முதலெழுத்துக்குரிய பெயர் :-----.
2. நிரந்தர முகவரி :-----.
3. நிரந்தர வதிவிட மாவட்டம் :-----.
4. தேசிய அடையாள அட்டை இலக்கம் :-----.
5. பிறந்த திகதி : - ஆண்டு :-----, மாதம் :-----, திகதி :-----.
6. விண்ணப்ப முடிவுத் திகதியின் போது வயது :-
வருடங்கள் :-----, மாதங்கள் :-----, நாட்கள் :-----.
7. பால் :-----.
8. நீங்கள் இலங்கை பிரசையாயின், வம்சாவழி மூலமா அல்லது பதிவின் மூலமா? : -----.
9. கல்வித் தகைமைகள் (சான்றிதழ்களில் பிரதிகள் இணைக்கப்படல் வேண்டும்)
க. பொ. த. (சா/த) பரீட்சை :
பரீட்சை ஆண்டும் சுட்டிலக்கமும் :-----.

| பாடம் | தரம் | பாடம் | தரம் |
|---|---|---|---|
| | | | |
| | | | |
| | | | |
| | | | |

10. (1) பிற தகைமைகள் :-----.
(2) தொழில்சார் தகைமைகள் :-----.
(3) சேவை அனுபவம் :-----.

11. நீங்கள் ஏற்கனவே இந்த பிரதேச சபையில் பணியாற்றுபவராயின், சேவையாற்றும் காலம் மற்றும் சேவை விபரம் மற்றும் நியமனத்தின் தன்மை நிரந்தரமானதா/அமைய அடிப்படையிலானதா/தற்காலிகமானதா என்பதை குறிப்பிடுதல் வேண்டும் :-----.

12. நீங்கள் நீதிமன்றத்தால் ஏதாவது குற்றச் செயலுக்காக குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டவரா? என்பதைக் குறிப்பிடவும் :-----.

இவ்விண்ணப்பப் படிவத்தில் என்னால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள விபரங்கள் உண்மையானவை எனவும் சரியானவை எனவும் இத்தால் வெளிப்படுத்துகின்றேன். என்னால் வழங்கப்பட்டுள்ள இதிலுள்ள ஏதேனும் விபரங்கள் பொய்யானவை, உண்மையற்றவை என தெரிவு செய்யப்படு முன்னர் கண்டுபிடிக்கப்பட்டால், நான் தகைமை இழப்பதற்கு ஆளாவேன் என்பதையும் அல்லது நியமனத்தின் பின்னர் கண்டுபிடிக்கப்பட்டால், எவ்வித நட்டஈடுமின்றி பதவியிலிருந்து நீக்கப்படுவதற்கும் ஆளாவேன் என்பதையும் நான் அறிவேன்.

----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி : -----.

**நிறுவனத் தலைவரின் சான்றிதழ்**

விண்ணப்பதாரரான திரு./ திருமதி/ செல்வி ............................................... இந்நிறுவனத்தில் ....................................(பதவி) ஆக சேவையாற்றுகிறார். அவர் தற்போதுள்ள சேவையிலிருந்து விடுவிக்கப்பட முடியும்/ விடுவிக்கப்பட முடியாது எனவும், அவரது சேவை திருப்திகரமானது எனவும் எதுவித ஒழுக்காற்று நடவடிக்கைகளுக்காகவும் தண்டிக்கப்படவில்லை எனவும் மேற்கூறப்பட்ட விபரங்கள் உண்மையானவை எனவும் பிழையற்றவை எனவும் நான் பரிந்துரை செய்கின்றேன்.

-----,
நிறுவன தலைவர்.

கையொப்பம் :-----.
பெயர் :-----.
பதவிப்பெயர் :-----.
திகதி :-----.

9-1171

---

**காலி மாநகர சபை**

காலி மாநகர சபையில் வெற்றிடமாகியுள்ள கீழ்க்காணும் பதவிகளுக்கு உரிய தகைமைகளைக் கொண்டுள்ள காலி மாநகர சபை அதிகார எல்லைக்குள் நிரந்தரமாக வசிப்பவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன :-

| பதவிகள் | பதவிகளின் எண்ணிக்கை | மாதாந்த சம்பளம் | ஆகக்குறைந்த கல்வித் தகைமைகள் |
|---|---|---|---|
| நூலக உதவியாளர் | 3 | ரூபா 11,730 – 120×10 – 130×10– 145×10 – 160× 12 - ரூபா 17,600 | சிங்களம், தமிழ் மொழி, எண்கணிதம் உட்பட ஆறு பாடங்களில் சித்தியடைந்திருத்தல் |
| தொழிலாளர் | 37 | ரூபா 11,730- 18×120 - ரூபா 13,890 | 8 ஆந் தரம் சித்தியடைந்திருத்தல் |
| அலுவலக தொழிலாளர் | 7 | ரூபா 11,730 – 18 ×120 – ரூபா 13,890 | 8 ஆந் தரம் (ஆண்டு 9 சித்தியடைந்திருத்தல்) |
| மோட்டார் தொழிநுட்பவியலாளர் | 1 | ரூபா 12,210 – 18 ×130 – 14,550 | க. பொ. த. (சா/த) பரீட்சையில் ஆகக் குறைந்தது ஆறு பாடங்களில் சித்தியடைந்திருத்தல் அரசாங்கத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள நிறுவனமொன்றில் உரிய துறையில் ஒரு வருடத்துக்கு குறையாத பயிற்சி ஒன்றை பூரணமாக முடித்தவராக இருத்தல் |
| கம்பி வேலை உதவியாளர் | 1 | ரூபா 12,210 – 18 ×130 – ரூபா 14,550 | 8 ஆந் தரம் சித்தியடைந்திருத்தல், உரிய தொழிலில் குறைந்தது ஒரு வருட சேவை அனுபவம் பெற்றிருத்தல் |
| தையல் ஆலோசகர் | 1 | ரூபா 12,470-18×130-14,810 | க. பொ. த. (சா/த) பரீட்சையில் சிங்களம், கணிதம், மனைப்பொருளியல், உட்பட குறைந்தது ஆறு பாடங்களில் சித்தியடைந்திருத்தல் |

| பதவிகளின்பெயர் | பதவிகளின் எண்ணிக்கை | மாதாந்த சம்பளம் | ஆகக்குறைந்த கல்வித் தகைமைகள் |
|---|---|---|---|
| அலுவலகப் பணி உதவியாளர் | 2 | ரூபா 12,210-18 × 130-ரூபா 14,550 | 8 ஆந் தரம் (ஆண்டு 9 சித்தியடைந்திருத்தல்) |
| சிறு நிருவாகத்தர் | 2 | ரூபா 12,470-18×130-ரூபா 14,810 | 8 ஆந் தரம் (ஆண்டு 9 சித்தியடைந்திருத்தல்) அதற்கு சமமான வேறு ஒரு பரீட்சையில் சித்தியடைந்திருப்பதுடன் நிதி சம்பந்தமான துறையில் ஒரு வருட அனுபவம் |
| கண்காணிப்பாளர் | 8 | ரூபா 12,470-18×130-ரூபா 14,810 | க. பொ. த. (சா/த) பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் |
| பாதுகாப்பாளர் | 13 | ரூபா 12,210-18×130-ரூபா 14,550 | 8 ஆந் தரம் (ஆண்டு 9 சித்தியடைந்திருத்தல்) |

2. **தேவையான தகைமைகள்** :

(i) விண்ணப்பப்பத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித்திகதிக்கு 18 வயதிற்கு குறையாதவராகவும் 45 வயதிற்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும் ;

(ii) விண்ணப்பதாரர் இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும் ;

(iii) விண்ணப்பதாரர் தென் மாகாணத்தினுள் விண்ணப்ப முடிவுத் திகதிக்கு முன்னுள்ள 3 வருடங்கள் நிரந்தரமாக வசிப்பவராக இருத்தல் வேண்டும் ;

(iv) விண்ணப்பதாரர் நன்னடத்தை உடையவராக இருத்தல் வேண்டும் ;

(v) தண்டனை சட்டக் கோவையின் கீழ் நீதிமன்றத்தால் குற்றவாளியென தீர்ப்பளிக்கப்பட்டு தண்டனை பெற்றவராக இல்லாதிருத்தல் வேண்டும் ;

(vi) காலி மாநகர அதிகார எல்லைக்குள் வசிப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படுவதுடன் தற்போது காலி மாநகர சபையில் தற்காலிக/அமைய/சமயாசமய/ஒப்பந்த அடிப்படையில் சேவையாற்றும் ஆண், பெண் இருபாலர்கள் விடயத்தில் விசேட கவனம் செலுத்தப்படும் ;

(vii) விண்ணப்பதாரர் குறிப்பிட்ட பதவிகளுக்கு நேராக உள்ள குறைந்த தகைமை பெற்று இருத்தல் வேண்டும் ;

(viii) விண்ணப்பங்கள் கோரப்பட்டதன் பின்னர் கோரப்படும்போது ஆட்சேர்ப்புச் செய்தல் தாமதமாகுதல் அல்லது மாற்றஞ் செய்தல் அல்லது இவ்வறிவித்தலை செல்லுபடியற்றதாக்குதல் அல்லது திருத்தஞ் செய்தல் என்பவற்றிற்கான அதிகாரம் காலி மாநகர சபையின் ஆணையாளருக்குரியதாகும்.

3. **சேவை நிபந்தனைகள்** :

(i) இப்பதவிகள் நிரந்தரமானவை ;

(ii) விதவை, அநாதை ஓய்வூதியச் சம்பளம் உரித்துடையது ;

(iii) நியமனம் 03 வருட தகுதிகாண் காலத்திற்கு கீழ்பட்டதாகும் ;

(iv) இவ்வாட்சேர்ப்பு நிபந்தனைகளுக்கும் சட்டங்களுக்கும் மேலதிகமாக இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் சட்டங்களுக்கும், நிதிச்சட்டங்களுக்கும் தென் மாகாண சபையின் அல்லது தென் மாகாண அரச சேவை ஆணைக்குழுவின் அவ்வப்போதைய சட்டங்களுக்கும் உத்தரவுகளுக்கும் ஏற்புடையதாக கருமமாற்ற கட்டுப்படல் வேண்டும்.

4. **ஆட்சேர்ப்பு முறை** :

(i) நேர்முகப் பரீட்சை ஒன்றின் மூலம் தகைமை உடையவர்களை தேர்ந்தெடுத்தல் ;

(ii) விண்ணப்பப்பத்திரத்துடன் பின்வரும் சான்றிதழ்களின் பிரதிகளை இணைத்து அனுப்ப வேண்டியதுடன் மூலப் பிரதிகளை நேர்முகப்பரீட்சையின்போது முன்வைத்தல் வேண்டும் ;

   (i) பிறப்புச் சான்றிதழ் பத்திரம் ;

   (ii) கல்விச் சான்றிதழ் ;

(iii) வதிவை நிருபிக்கும் வாக்குரிமை பெயர் ஆவணத்தின் பிரதி ஒன்று அல்லது அண்மையில் பெற்ற கிராம அலுவலர் சான்றிதழ் ;

(iv) அண்மையில் பெற்ற இரு நற்சாட்சிப் பத்திரங்கள் ;

(v) தொழில் அல்லது அனுபவம் பற்றிய சான்றிதழ்கள் இருப்பின் அச்சான்றிதழ்கள் ;

(vi) ஓட்டுனர்கள் பதவிக்காயின் ஓட்டுனர் அனுமதிப்பத்திரம்.

5. அடிப்படைத் தகைமை பெற்றுள்ள விண்ணப்பதாரர்களை மாத்திரம் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படும்.

6. **விண்ணப்பங்களை சமர்ப்பித்தல்** : விண்ணப்பப்பத்திரத்தின் பிரகாரம் பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பத்தை 2010.10.08 ஆந் திகதிக்கு முனனர் அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக "நகர சபை ஆணையாளர், மாநகர சபை, காலி" என்ற விலாசத்துக்கு பதிவுத் தபால் மூலம் அனுப்புதல் வேண்டும். விண்ணப்பப்பத்திரம் அடங்கிய காகித உறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியை தெளிவாகக் குறிப்பிடுதல் வேண்டும். பூரணப்படுத்தப்படாத விண்ணப்பப்பத்திரங்கள் நிராகரிக்கப்படும்.

மெத்சிறி த சில்வா,
நகர முதல்வர் (நகராதிபதி),
காலி மாநகர சபை.

மாநகர சபை,
காலி.
2010.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**காலி மாநகர சபை**

................. பதவிக்கான விண்ணப்பம்

1. விண்ணப்பதாரியின் பெயர் முதலெழுத்துடன் :-----.
முதலெழுத்தை குறிக்கும் பெயர் :-----.
2. (i) நிரந்தர வதிவிட மாவட்டம் :-----.
(ii) நிரந்தர முகவரி :-----.
3. பிறந்த திகதி : - வருடங்கள் :-----, மாதங்கள் :-----, நாட்கள் :-----.
4. தேசிய அடையாள அட்டை இலக்கம் :-----.
5. பால் (ஆண்/பெண்) :-----.
6. விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதியன்று வயது :-
வருடங்கள் :-----, மாதங்கள் :-----, நாட்கள் :-----.
7. விவாகமானவரா? இல்லையா? :-----.
8. தேசிய இனம் :-----.
9. நீர் இலங்கைப் பிரசையாயின் பிறப்பினாலா? பதிவின் மூலமா? : -----.
10. கல்வித் தகைமைகள் :-----.
11. தொழில் சார்ந்த தகைமைகள் :-----.
12. நீர் தற்போது இச்சபையில் சேவை செய்பவராயின் :-
தற்போதுள்ள பதவி :-----.
அப்பதவி நியமனம் பெற்ற திகதி :-----.
அந்நியமனத்தின் தன்மை (நிரந்தர/அமைய/தற்காலிக/சமயாசமய/ஒப்பந்த அடிப்படை என்ற விபரம்) :-----.
13. நீர் எப்போதாவது குற்றமொன்றின் நிமித்தம் நீதிமன்றத்தால் குற்றவாளியாக்கப்பட்டுள்ளீரா என்பதை உட்படுத்தல் வேண்டும் :-----.

இவ்விண்ணப்பப்பத்திரத்தில் என்னால் அளிக்கப்பட்டுள்ள விபரங்கள் உண்மையானவை எனவும் சரியானவையெனவும் உறுதியளிக்கின்றேன். இதில் உள்ளடக்கப்பட்டுள்ளவை பொய்யானது அல்லது பிழையானது என இப்பதவிக்குத் தேர்ந்தெடுப்பதற்கு முன்னர் வெளியானால் நான் தகைமையற்றவனாகுவேன் என்றும் நியமனம் கிடைத்ததன் பின்னர் அவ்வாறு விடயங்கள் நிரூபிக்கப்படுமாயின், எவ்வித நட்டஈடுமின்றி என்னை சேவையிலிருந்து நீக்குவதற்கு முடியும் என்பதை நான் அறிவேன்.

----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி : -----.

**தற்போது அரச சேவையிலுள்ள விண்ணப்பதாரர்களுக்கான திணைக்கள/நிறுவனத் தலைவரின் சான்றிதழ்**

இவ்விண்ணப்பதாரராகிய திரு./திருமதி/செல்வி ............................................... தற்போது இத்திணைக்களத்தில் நிறுவனத்தில் .................................... ஆக கடமையாற்றுகின்றார். அவரை சேவையிலிருந்து விடுவிக்க முடியும்/முடியாது. அவர் எவ்விதத்திலும் ஒழுக்காற்றுக் குற்றங்களுக்கு ஆளாகவில்லை என இத்தால் உறுதிப்படுத்துவதுடன் விண்ணப்பப்பத்திரத்தை விதந்துரைக்கின்றேன்/விதந்துரைக் காதிருக்கின்றேன்.

-----,
திணைக்களத் தலைவர்/
நிறுவனத் தலைவர் கையொப்பம்.

திகதி :-----.
பெயர் :-----.
பதவிப் பெயர் :-----.
திணைக்களம்/நிறுவனம் :-----.
அலுவலக இலச்சினை

9-1205

---

# உள்ளூராட்சி அறிவித்தல்கள்

**பூஜாபிட்டிய பிரதேச சபை**

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் 2010.07.16 ஆந் திகதிய அரசாங்க வர்த்தமானியின் பகுதி IV (ஆ) (மாகாண சபைகள்) இல் பூஜாபிட்டிய பிரதேச சபை மூலம் பிரசுரிக்கப்பட்ட மதிப்பீட்டு வரிகள் அறிவித்தலில் பின்வரும் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக இத்தால் தெரிவித்துக்கொள்கின்றேன் :-

"குறித்த அறிவித்தலின் முதலாம் பந்தியின் முதலாவது வரி '1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டமூலத்தின் 134 (1) மற்றும் 134 (2)' எனவும், 1340 ஆவது பக்கத்தில் இலக்கம் 5 இன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள அத்தரகம பாதையின் இடதுபுறம் '150மீ.' எனவும் திருத்தம் செய்யப்பட்டுள்ளன."

அனுர ஹேமந்த விஜேரத்ன,
தலைவர்,
பூஜாபிட்டிய பிரதேச சபை,
பூஜாபிட்டிய.

பிரதேச சபை அலுவலகம்,
பூஜாபிட்டிய,
2010.08.25.

9-1084

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.